# பிரதான தகவல் கூற்று மற்றும் சேவை பிரசுரம்

| கணக்கின் பெயர் | MCB சேமிப்புக் கணக்கு |
|---|---|
| விபரம் | எம்சீபி வங்கியில் சேமிப்புக் கணக்கு என்பது ஏனைய பல நன்மைகளைக் கொண்டுள்ள உங்கள் தனிப்பட்ட சேமிப்பாகும். |
| நாணயம் | இலங்கை ரூபா. |
| முக்கிய விடயங்கள் | ஆரம்ப வைப்பு : 1,000/- |
| | பராமரிக்க வேண்டிய மாதாந்த குறைந்தபட்ச சராசரி மீதி: 1,000/- |
| குறைந்தபட்ச வைப்புத் தொகை | 1,000/- கணக்கு செயல்படும் காலம் முழுவதும் கணக்கில் இருத்தல் வேண்டும் |
| கணக்கைப் பேணுவதற்கான கட்டணம் | மாதாந்த குறைந்தபட்ச சராசரி மீதி பராமரிக்கப்படாவிட்டால் மாதாந்தம் 100/- வசூலிக்கப்படும் |
| கணக்கினை மூடுவதற்கான கட்டணம் | 1,000/- வரை வசூலிக்கப்படும் |
| வட்டி வீதம் (ஆண்டுக்கு) | சமீபத்திய வட்டி விகிதங்களுக்கு, www.mcb.com.lk ஐப் பார்வையிடவும் |
| வட்டி வழங்கும் கால இடைவெளி | மாதாந்தம் |
| நன்மைகள்/ பெறுமதி சேர் சேவைகள் | மீளப் பெறுவதற்கான எண்ணிக்கையில் எவ்விதமான வரையறையும் இல்லை |
| | நாடளாவிய ரீதியில் காணப்படும் 4500க்கும் மேற்பட்ட தானியங்கி டெலர் இயந்திரங்கள் (ATMs) மூலம் உங்கள் கணக்கை அணுகுவதற்கான வசதி (lankapay) |
| | POS அணுகலுடன் கூடிய பற்று அட்டைகள் (JCB / lankapay) |
| | மொபைல் பேங்கிங் செயலி மூலம் உங்கள் பரிவர்த்தனைகளைச் செய்ய பாதுகாப்பான மற்றும் எளிதான அணுகல் (தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான சேவை உள்ளதுடன் பதிவு அவசியமாகும்) |
| | குறுஞ்செய்தி விழிப்பூட்டல்கள் (தானியங்கி) மற்றும் இலத்திரனியல் கூற்று வசதி (பதிவு அவசியமாகும்) |
| கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் பண்டம் மற்றும் பிற பெறுமதி சேர் சேவைகள் தொடர்பான கட்டணங்களுக்கு www.mcb.com.lk ஐப் பார்வையிடவும் (வங்கி கட்டணங்களின் அட்டவணை). |
| தகைமைகள் | தனிநபர் - இலங்கையில் வதியும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் (தனிநபர்/ கூட்டு) |
| | நிறுவனங்கள் - அந்தந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் |
| அவசியமான ஆவணங்கள் | சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கைத் திறப்பதற்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தொடர்புடைய படிவங்கள் |
| தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு | செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தேசிய அடையாள அட்டையுடன் கூடிய கடவுச்சீட்டு (கணக்குகளைத் திறக்க/ செயல்படுத்தத் தகுதியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் செல்லுபடியாகும் விசாவை வழங்க வேண்டும்) |
| | முகவரிச் சான்று (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்) |
| நிறுவன வாடிக்கையாளர்களுக்கு | வருமானச் சான்று |
| | வியாபாரப் பதிவு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்/ படிவங்கள் |
| | பணிப்பாளர்கள்/ பங்குதாரர்களின் அடையாள ஆவணங்கள் |
| கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை | வங்கிக்கு, தனிநபர் அல்லது நிறுவனத்தின் அடையாளத்தை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் ஆவணம் (தேவைப்பட்டால்) |
| ஏனைய தொழிற்பாட்டு தகவல்கள் / நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | கணக்கைத் திறக்க மற்றும் ஏனைய பெறுமதி சேர் சேவைகளைப் பெறுவதற்கு தயவுசெய்து அருகிலுள்ள எம்சீபி வங்கிக் கிளைக்குச் சென்று முழுமையான ஆவணங்களை ஒப்படைக்கவும் |
| | எந்தவொரு எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் வைப்புகள்/ மீளப் பெறுதல் அனுமதிக்கப்படுகிறது. |
| | திருப்திகரமான நிலை அல்லது சட்டப்பூர்வ தேவைகளை பூர்த்தி செய்து பராமரிக்கப்படாத எந்தக் கணக்கையும் நிறுத்தி வைத்திருக்க/ மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு. |
| | எந்த வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளும் இல்லாது 02 வருடங்களுக்கு* மேலாக செயல்படாமல் இருக்கும் கணக்குகள் உறங்கல் கணக்குகளாக வகைப்படுத்தப்படும். (காலம் அவ்வப்போது மாறுபடலாம்) |
| | 10 ஆண்டுகள் செயலற்ற நிலையில் இருக்கும் கணக்குகள் கைவிடப்பட்டதாகக் கருதப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டுதல்களின்படி கையாளப்படும். |
| | இலங்கை மத்திய வங்கியின் வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு இணங்க வைப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன. |
| | இணக்கத்திற்காக ஏதேனும் தவறான/அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் எழுத்துப்பூர்வமாக கிளைக்குத் தெரிவிக்க வேண்டும் (தவறுகைகளை மீளத் திருப்பல்/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள்). |
| | வங்கியின் உள் கொள்கைகள்/செயல்முறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது மாறக்கூடும், மேலும் அவை வங்கியின் இணையதளம்/கிளை அறிவித்தல் பலகைகளில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஊடகம் மூலம் முன்கூட்டியே அறிவிக்கப்படும். |
| மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள் | எம்சீபி வங்கிக் கிளைகளுக்கு அழைப்பை மேற்கொள்ளுங்கள்/விஜயம் செய்யுங்கள்<br>இணையத்தளம்: www.mcb.com.lk<br>ஹொட்லைன்: 011 5222 200<br>மின்னஞ்சல் : info@mcb.com.lk |
| முறைப்பாடுகளை கையாளும் நடைமுறை | எந்த எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் புகார்களை அனுப்பலாம் (பிரத்தியோக புகார் பெட்டி உள்ளது) |
| | பிரத்தியோக நேரடி தொடர்பு மையம் :<br>திணைக்களத் தலைவர் - முறைப்பாடு, எம்சீபி வங்கி லிமிடட், 08, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு 01.<br>தொலைபேசி : 011 5222 230 \| மின்னஞ்சல்: complaints@mcb.com.lk |
| | தீர்மானம் உங்களுக்கு திருப்திகரமாக இல்லாவிட்டால்/ 04 வாரங்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால், நீங்கள் புகாரை பின்வருமாறு விரைவுபடுத்தலாம்:<br>நிதி ஒம்புட்ஸ்மேன், இல.01, பெதஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு - 05.<br>தொலைபேசி: 0112595624 \|மின்னஞ்சல் : fosril@sltnet.lk \|இணையத்தளம்: www.financialombudsman.lk |

எம்சீபி வங்கி லிமிடட் என்பது இலங்கை மத்தியவங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.
கடன் மதிப்பீடு: "AA (lka)" | **Outlook Stable (Fitch Ratings)**